# வலயக்கல்வி அலுவலகம், கல்முனை
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் -1,11

**தரம் -10** **நேரம்:- 3 மணித்தியாலம்**

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1 - 5 வரையான வினாக்களுக்கு விடை தருக

அஷ்ரா மகா வித்தியாலயத்தினால் பாடசாலை மாணவர்கள், கல்வி சார், கல்வி சாரா ஊழியர்களிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்வி மனு கோரப்பட்டு, அஜ்மிர் என்பவருக்கு சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அஜ்மிர் சிற்றுண்டிச்சாலைக்கு தேவையான உணவுப் பொருட்களை ரோகித் பேக்கரியிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார்.

1.மேலே தரப்பட்ட சம்பவ கற்கையில் இருந்து அஷ்ரா மகா வித்தியாலயத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
(1) சுகாதாரம் (2) பாதுகாப்பு (3) உணவு (4) கல்வி

2.அஷ்ரா மகா வித்தியாலயத்தின் அகச்சூழல் காரணி ஒன்றுக்கான உதாரணம்
(1)பெற்றோர் (2) அஜ்மிர் (3) மாணவர்கள் (4)ரோகித் பேக்கரி

3.மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் அரச துறை சார்ந்த வணிக நிறுவனம்
(1) அஷ்ரா மகா வித்தியாலயம் (2) சிற்றுண்டிச்சாலை
(3) பழைய மாணவர் ஒன்றியம் (4) ரோகித் பேக்கரி

4.மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் இலாப நோக்குடைய வணிகம்
(1) ரோகித் பேக்கரி (2) அஷ்ரா மகா வித்தியாலயம்
(3) வலய கல்வி பணிமனை (4) மாவட்ட சுகாதார பணிமனை

5.ரோகித் பேக்கரி தொடர்பிலான சரியான கூற்றை தெரிவு செய்க
(1) சட்ட ஆளுமை உள்ளது (2) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டது
(3) இலாப நோக்கற்ற வணிகம் (4) பொருள் உற்பத்தி வணிகம்

6.பின்வருவனவற்றுள் சேவை உற்பத்தி வணிகமாக கருதப்படக்கூடியது.
(1) வரையறுக்கப்பட்ட பிறீமா கம்பனி (3) வரையறுக்கப்பட்ட மலிபன் கம்பனி
(2) இலங்கை வங்கி (4) TVS மோட்டார் கம்பனி

7.உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பன வணிகமொன்றிற்கு
1. உள்ளீடுகள் 2. வெளியீடுகள்
3. பௌதீக வளங்களாகும் 4. செயன்முறைகள்

8. நாடொன்றின் பொருளாதார விருத்திக்கு தேவையான கொள்கைகளை வகுப்பது……………….ஆகும்.
1. வணிக வங்கி 2. அரசாங்கம்
3. நிதி நிறுவனங்கள் 4. காப்புறுதி நிறுவனம்

9. வணிகமொன்றின் அகச்சூழல் காரணியாக கருதப்பட முடியாதது
1. வாடிக்கையாளர் 2.உரிமையாளர் 3. முகாமையாளர் 4. ஊழியர்

10. பொருட்கள் சேவைகளது பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதானது எவ்வாறு அழைக்கப்படும்

1.வட்டி வீதம் அதிகரிப்பு  2. நிறை தொழில் மட்டம்  3. சேமிப்பு  4. பணவீக்கம்

11. X நிரலில் வணிக நிறுவனங்களின் வகைகளும் Y நிரலில் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| X epuy; | Y நிரல் |
|---|---|
| A.தனியுடைமை | 1. செலான் வங்கி |
| B.பங்குடைமை | 2. ஒசுசல |
| C.கூட்டிணைக்கப்பட்ட கம்பனி | 3. ஸ்டைல் சலூன் |
| D.அரச கூட்டுத்தாபனம் | 4. டேவீட் பீரிஸ் அன்ட் சன்ஸ் |

இவற்றை தொடர்புபடுத்தும் போது சரியான விடைத் தொகுதியாக அமைவது

1. A –3, B -1, C –4 , D – 2  2. A -3, B-4, C-1, D -2
3. A –4, B -1 C – 3 ,D – 2  4. A – 3, B -4, C – 2,D – 1

12.பாராளுமன்ற சட்டங்கள் மூலம் உருவாக்கப்படும் வணிக அமைப்பு எது

1.கூட்டிணைக்கப்பட்ட கம்பனி  2.கூட்டுறவு வணிகம்
3. அரச கூட்டுத் தாபனம்  4. அரச திணைக்களம்

13.ஜனநாயக நிர்வாகம், சுயமான திறந்த அங்கத்துவம் போன்ற பண்புகளை கொண்ட வணிக அமைப்பு

1. ரெலிகொம்  2.மீனவர் கூட்டுறவு சங்கம்
3. R & S சகோதரர்கள்  4. இலங்கை மின்சார சபை

14.கமநல சேவை நிலையம் எவ்வகையான வணிக அமைப்பாகும்

1. கூட்டுறவு வணிகம்  2. சங்க வகை
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி  4. பொதுத்துறை வணிகம்

15.தனியுடமை வணிகம் தனது வணிக பெயரினை பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்க வேண்டிய காலப்பகுதி யாது?

1.1 மாதம்  2. 2 வாரங்கள்  3. 1 வாரம்  4. 5 வாரங்கள்

16.சட்டத்தின் முன் தனி மனித அந்தஸ்து கொண்ட வணிக அமைப்பு பின்வருவனவற்றுள் எது?

1. தனியுடைமை  2. பங்குடைமை  3. கூட்டுறவு சங்கம்  4. அரச திணைக்களம்

17. இரட்டை பதிவு தத்துவத்தின்படி வரவு பக்கத்தில் அதிகரிப்பும் செலவு பக்கத்தில் குறைவும் பதியப்படும் கணக்கு

1.சொத்துக் கணக்கு  3. வருமான கணக்கு
2.பொறுப்பு கணக்கு  4. உரிமைக் கணக்கு

18.தளபாடங்களை வாங்கி விற்கும் வணிகம் ஒன்றின் நடைமுறை சொத்தாக கருதப்படும் தளபாடங்கள் யாது?

1.வணிக பயன்பாட்டிற்காக உள்ளவை
2.உரிமையாளரின் சொந்த பாவனைக்காக பெறப்பட்டவை
3.மீள் விற்பனைக்காக காணப்படுபவை
4.வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான தளபாட பொருத்துக்கள்

19.இரட்டை தொழிற்பாடுகளை நிறைவேற்றும் ஏடு

1.கொள்வனவு நாளேடு  3. பொது நாட்குறிப்பேடு
2.விற்பனை நாளேடு  4. காசு கணக்கு

20. உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் உருப்படிகள்
1.உரிமையாளர் பற்றிய பொருட்கள் ரூபா 5000
2.மின்சார கட்டணம் செலுத்திய தொகை ரூபா 10,000
3.பெற்ற முதலீடு வருமானம் ரூபா 25000
4.கடன்பட்டோரிடம் இருந்து 5% கழிவுடன் ரூபா 15,000 பெறப்பட்டது

21. செலவு அதிகரித்தல் வரவு குறைதல் எனும் இரட்டை பதிவு தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு
1.கொடுத்த கழிவு கணக்கு
2.பெற்ற கழிவு கணக்கு
3. கொள்வனவு கணக்கு
4. காசு கணக்கு

22.கொடுப்பனவு கைச்சாத்து மூல ஆவணமாக பயன்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல்
1.கடன் கொள்வனவு ரூபா 15,000
2.கடன் விற்பனை ரூபா 25,000
3.காசுக்கு விற்பனை ரூ. 45,000
4.காசுக்கு கொள்வனவு ரூ. 15,000

23.விற்பனையின் போது பெறப்பட்ட ரூபா 20,000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்பிலிடும் போது அதற்கான இரட்டை பதிவு
1.காசு கணக்கு வரவு 20,000
விற்பனை கணக்கு செலவு 20,000
2.வங்கி கணக்கு வரவு 20,000
காசு கணக்கு செலவு 20,000
3.வங்கி கணக்கு வரவு 20,000
விற்பனை கணக்கு செலவு 20,000
4.காசு கணக்கு வரவு 20,000
வங்கி கணக்கு செலவு 20,000

24.பற்றுக்கணக்கானது ஒரு
1. செலவின கணக்கு
2. பொறுப்பு கணக்கு
3. உரிமை கணக்கு
4. வருமான கணக்கு

• பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 25 தொடக்கம் 27 வரை உள்ள வினாக்களுக்கு விடை தருக

A.ரூபா 20,000 பெறுமதியான பொருட்கள் காசுக்கு கொள்வனவு செய்தல்.
B.ரூபா 15,000 க்கு வாங்கிய பொருட்களை ரூபா 20,000 க்கு கடனுக்கு விற்பனை செய்தல்.
C.கடன் பட்டோர் ஒருவரிடம் இருந்து ரூபா 7,000 பெற்றுக் கொள்ளல்.
D.வணிக அலுவலகப் பாவனைக்காக ரூ. 80,000 பெறுமதியான தளபாடமொன்று கடனுக்கு கொள்வனவு செய்தல்.

25.மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கலில் இந்த வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டில் உரிமையாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலானது
1. A ஆகும்
2. B ஆகும்
3. C ஆகும்
4. D ஆகும்
2.

26.மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல் பின்னர் வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டில் சொத்தின் பெறுமதியானது
1.ரூபா 22,000 ஆல் அதிகரிக்கும்.
2.ரூபா 32,000 ஆல் அதிகரிக்கும்.
3.ரூபா 85,000 ஆல் அதிகரிக்கும்.
4.ரூபா 9000 ஆல் அதிகரிக்கும்.

27.மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்கு முன்னர் வணிகத்தின் மொத்த பொறுப்புக்கள் 85,000 ரூபா ஆயின் கொடுக்கல் வாங்கலுக்கு பின்னர் மொத்த பொறுப்புகளின் பெறுமதி யாது?
1.ரூபா 165, 000
2. ரூபா 90, 000
3. ரூபா 75, 000
4. ரூபா160, 000

28.K & R சகோதரர்கள் வணிகமானது 10 பிஸ்கட் பொதிகளை ஒவ்வொன்றும் ரூபா 200 வீதம் கடனுக்கு விற்பனை செய்ததுடன் 10% வியாபார கழிவையும் கழித்துக் கொண்டது இக் கொடுக்கல் வாங்கல் காரணமாக இவ்ணிகத்தின்

1.கொடுத்த கழிவு ரூபா 200 ஆல் அதிகரிக்கும்
2.விற்பனை வருமானம் ரூபா 2000 ஆல் அதிகரிக்கும்
3.கடன்பட்டோர் தொகை ரூபா 2000 ஆல் அதிகரிக்கும்
4.கடன்பட்டோர் தொகை ரூபா 1800 ஆல் அதிகரிக்கும்

29.நம்பி வணிகத்தின் ஜனவரி மாத சில்லறை காசு வசக்கட்டு தொகை ரூபா 2000 ஆகும். இம்மாதத்தில் இடம்பெற்ற சில்லறை காசு கொடுப்பனவுகள் ரூபாய் 1600 எனில் மீள் நிரப்பப்பட வேண்டிய பணத்தொகை யாது?

1.ரூ. 1600 2.ரூ. 2000 3. ரூ. 400 4. ரூ. 1200

30.மாணிக்கம் வணிகத்தின் நடைமுறை கணக்கில் உள்ள பாதக மீதியானது வணிகத்திற்கு ஒரு

1.சொத்தாகும் 3. வருமானமாகும்
2.பொறுப்பாகும் 4. உரிமையாண்மையாகும்

31.உரிமையாளரால் மேலதிகமாக இடப்பட்ட மூலதனம் ரூபா 50,000 ஐ பதிவது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணத்தையும் மூல ஏட்டையும் சரியாக காட்டும் விடை

1.காசேடு, பற்றுச்சீட்டு 3. பற்றுச்சீட்டு, பொதுநாட்குறிப்பு
2.பொதுநாட்குறிப்பேடு, பற்றுச்சீட்டு 4. பற்றுச்சீட்டு , காசேடு

32.வங்கி கணக்கு மீதியானது வங்கி கூற்று மீதியை விட அதிகமாக காணப்படுவதற்கான காரணமாக அமைவது

1.வசூலிக்கப்படாத காசோலை ரூ.7500
2.கடன்பட்டோரிடமிருந்து நேரடியான வைப்பு ரூ.12,000
3.சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ.14,000
4.வங்கியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ.6000

33.சிவா வணிகத்தின் 2024 ஆகஸ்ட் மாதத்திற்கான வங்கி கூற்று செலவு மீதி ரூபா 21,000 ஆகும் இது

1.வணிகத்தின் ஒரு சொத்தாகும் 2.வணிகத்தின் பொறுப்பாகும்
3.வணிகத்தின் ஒரு வங்கி மேலதிக பற்றாகும் 4.வங்கியின் சொத்தாகும்

34.அபான்ஸ் கம்பனியிடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் ரூபா 35000 ஆனது அபான்ஸ் கம்பனி கணக்கில் ரூபா 53,000 என பதியப்பட்டது. இவ்வழுவை திருத்துவதற்கான மூலப்பதிவேடு

1.காசேடு 2. விற்பனை நாளேடு 3. கொள்வனவு நாளேடு 4. பொது நாட்குறிப்பேடு

பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரை உள்ள வினாக்களுக்கு விடை தருக

31.12.2023இல் உள்ளவாறு ஜனகன் வணிகத்தின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுத்த மீதிகள் சில வருமாறு

| | ரூ. |
|---|---|
| மூலதனம் | 500,000 |
| கொள்வனவு | 300,000 |
| விற்பனை | 450,000 |
| கடன்பட்டோர் | 75,000 |
| கடன்கொடுத்தோர் | 50,000 |
| காசு மீதி | 30,000 |
| பெற்ற கழிவு | 18,000 |
| கொடுத்த கழிவு | 10,000 |
| செலுத்திய சம்பளம் | 20,000 |
| வங்கி மேலதிக பற்று | 45,000 |
| உரிமையாளர் பற்று | 12,000 |
| மின்சார கட்டணம் | 8,000 |
| நிதிச்செலவுகள் | 15,000 |
| நிருவாகச் செலவுகள் | 28,000 |
| முதலீடு | 100,000 |
| வங்கிக்கடன் | 200,000 |
| பெற்ற தரகு | 5,000 |

35.31.12.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த வருமானங்களின் தொகை
1.ரூ. 455,000 2. ரூ. 450,000 3. ரூ. 473,000 4. ரூ.468,000

36.31.12.2023 இல் நடைமுறை சொத்துக்களின் பெறுமதி
1.ரூ. 75,000 2. ரூ. 30,000 3. ரூ. 95,000 4. ரூ. 105,000

37.31.12 2023 இல் நடைமுறை பொறுப்புகளின் பெறுமதி
1.ரூ. 95,000 2. ரூ. 50,000 3. ரூ. 45,000 4. ரூ. 80,000

38.31.12.2023 முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம்
1.ரூ. 88,000 2. ரூ. 392,000 3. ரூ. 150,000 4. ரூ. 92,000

39.31.12.2023இல் உரிமையாண்மையின் பெறுமதி
1.ரூ. 500,000 2. ரூ. 592,000 3. ரூ. 488,000 4. ரூ. 580,000

40.31.12.2023இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த செலவினங்களின் தொகை
1.ரூ. 381,000 2. ரூ. 88,000 3. ரூ. 378,000 4. ரூ. 81,000

## வணிக கல்வியும் கணக்கீடும் II

01. பின்வரும் சம்பவ கற்கையை பயன்படுத்தி (I) தொடக்கம் (X) வரையான வினாக்களுக்கு விடை தருக

தர்ஷினி என்பவர் 01.01.2024 இல் "சாரா அழகுக்கலை எனும் பெயரில் அழகுக்கலை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். இதற்காக தன்னிடமிருந்த ரூ. 500,000 ஐ மூலதனமாக ஈடுபடுத்தினார். பின்னர் 02.01.2024இல் ரூ.300,000 பெறுமதியான உபகரணங்களையும் ரூ.100,000 பெறுமதியான அழகு சாதன பொருட்களையும் கொள்வனவு செய்தார். கட்டடம் ஒன்றை வாடகைக்கும் பெற்றுக் கொண்டார்.

இவ்வணிகமானது கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ளதுடன் அழகு சாதன பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன் இதற்கான கொடுப்பனவு அமெரிக்க நாட்டு நாணய அலகில் செலுத்தப்படுகிறது. இவர் அழகு கலை தொடர்பான டிப்ளோமா பட்டத்தினை பெற்றிருக்கின்றார். இவர் தனது கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள மக்கள் வங்கியில் நடைமுறை கணக்கினை ஆரம்பித்துள்ளார். வணிகத்தில் 2024 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

- வங்கியில் பெற்ற கடன் ........................................................... ரூ.300,000
- அழகு சாதன பொருட்கள் கொள்வனவு ..................................... ரூ.50,000
- பெற்ற வருமானம் ..........................................................................ரூ.150,000
- வாடகை செலுத்தியது ................................................................ ரூ.15,000
- மின்கட்டணம் செலுத்தியது ....................................................... ரூ.10,000
- தயா நிறுவனத்திடம் உபகரணம் கொள்வனவு ..............................ரூ.200,000
- உரிமையாளர் பற்றிய காசு ..........................................................ரூ.25,000

(I) அ) மேற்படி வணிகத்தின் நோக்கங்கள் இரண்டை குறிப்பிடுக.
ஆ) உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் இது எவ்வகை வணிகமாகும்?

(II) அ) மேற்படி வணிகத்தால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
ஆ) மேற்படி வணிகத்தின் நன்மைகள் இரண்டை குறிப்பிடுக.

(III) இவ்வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினர் இருவரை குறிப்பிட்டு, அக்கறை செலுத்துவதற்கான காரணம் ஒன்று வீதம் தருக?

(IV) அ) மேற்படி சம்பவத்தில் காணக்கூடிய பலம் ஒன்றினையும், வாய்ப்பு ஒன்றினையும் குறிப்பிடுக.
ஆ) மேற்படி சம்பவத்திலிருந்து பொருளாதார சூழல் காரணி ஒன்றினை குறிப்பிடுக.

(V) 01.01.2024ல் கணக்கீட்டுச் சமன்பாட்டை பெறுமதியுடன் குறிப்பிடுக.

(VI) நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி யாது?

(VII) வணிகத்தில் பேணக்கூடிய முதன்மை ஏடுகள் இரண்டினை குறிப்பிட்டு, அதற்குரிய மூல ஆவணத்தையும் குறிப்பிடுக.

(VIII) உரிமையில் குறைவை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றை மேற்படி சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.

(IX) மேற்படி வணிகம் பொது நாட்குறிப்பேட்டை பயன்படுத்தி பதிவு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல் ஒன்றை குறிப்பிடுக.

(X) 31.01.2024 காசு மீதியை கணிப்பிடுக

(10 X 2 = 20 புள்ளிகள்)

## பகுதி I வணிகக்கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

02.(I)தேவைக்கும் விருப்பத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(II)பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதை குறிப்பிடுக.

அ) வணிகமானது எப்பொழுதும் மக்களின் தேவை மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்கின்றது.

ஆ) வாடிக்கையாளர் பொருட்கள் சேவைகளை நுகர்வுத் தேவைக்காக மட்டுமே கொள்வனவு செய்கின்றனர்.

இ) வணிகமொன்றின் அக்கறை உள்ள தரப்பினர்கள் அனைவரும் வணிகத்தின் அகச்சூழல் காரணியாக காணப்படுவர்.

ஈ) வணிகர்களால் விருப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

(2புள்ளிகள்)

(III)இரண்டு வணிகங்கள் கீழே தரப்பட்டுள்ளன

A - தையல் பயிற்சி நிலையம்

B - காளான் உற்பத்தி வணிகம்

அ) மேற்படி வணிகங்களால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவைகள் யாவை என குறிப்பிடுக.

ஆ) உற்பத்தி பொருளின் தன்மையின் அடிப்படையில் மேலே தரப்பட்ட A, B வணிகங்கள் எவ்வகையாகும்?

(2 புள்ளிகள்)

(IV) அ) உற்பத்தி காரணிகள் இரண்டினை தலா ஒரு உதாரணம் வீதம் குறிப்பிடுக.

ஆ) மனித தேவைகள் இரண்டினை குறிப்பிட்டு அத்தேவைகள் நிறைவு செய்யப்படும் வழிமுறைகள் ஒவ்வொன்று வீதம் எழுதுக.

(2 புள்ளிகள்)

(8 புள்ளிகள்)

(03) (I) அ) வணிகச் சூழல் என்றால் என்ன?

ஆ) வணிகச் சூழல் வகைகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II)பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதை குறிப்பிடுக.

அ) வணிகத்தின் வாடிக்கையாளர் ஒருவர் அகச் சூழல் காரணியாகும்.

ஆ) வணிகமொன்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் நபர் முகாமையாளர் ஆவார்.

இ) அரசினால் முன்வைக்கப்படுகின்ற வரவு செலவு திட்டம் ஒரு அரசியல் சூழல் காரணியாகும்.

ஈ) வணிகம் ஒன்று பொருத்தமற்ற புவியியல் இடத்தில் அமைந்து இருக்குமாயின் அது வணிகத்தின் சவாலாகும்.

(2 புள்ளிகள்)

(III)சுனில் வணிகமானது வணிகத்தை விரிவாக்கும் நோக்கில் வங்கி கடனுக்காக விண்ணப்பித்திருந்தது இதன்போது வங்கி முகாமையாளர் வங்கி கடனுக்கான வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றார்.

அ) இச்சம்பவத்தில் இனங் காணக்கூடிய வணிகச் சூழல் காரணி யாது?

ஆ) இவ் வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் இருவரை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(IV)சிவசங்கரி என்பவர் பிரபல பாடசாலைக்கு அருகில் "அக்காச்சி வணிகம்" எனும் பெயரில் சிறு உணவகம் ஒன்றை நடத்துகின்றார். இவ்வணிக விரிவாக்கத்திற்காக வங்கி கடனும் பெற வேண்டி உள்ளது.

அ) இவ் வணிகத்தில் காணப்படும் பலவீனமொன்றை குறிப்பிடுக.

ஆ) இவ் வணிகத்தில் காணப்படும் வாய்ப்பு ஒன்றை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(8 புள்ளிகள்)

(04)

I.கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்றின் பண்புகள் இரண்டு தருக

(2 புள்ளிகள்)

II.பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என குறிப்பிடுக

அ) பங்குடைமை வணிகம் ஒன்றில் பங்காளர்களின் நட்டபொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டவை ஆகும்.

ஆ) மோசடி தவிர்ப்பு சட்டமானது பங்காளர்களின் உச்ச எண்ணிக்கையை வரையறுக்கின்றது.

இ) மக்கள் வங்கியானது இலாப நோக்கமற்ற வணிகம் ஆகும்.

ஈ) ஒசுசல நிறுவனமானது ஓர் அரச கூட்டுத்தாபனம் ஆகும்.

(2 புள்ளிகள்)

III.வைத்திய நிபுணர்கள் சிலர் இணைந்து கூட்டாக பொறுப்புகளை பகிரவும் இலாபங்களை தமக்கிடையே பகிர்ந்து கொள்வதற்காக "பெஸ்ட் ஹெல்த" எனும் பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பிக்கின்றனர்.

அ) இவர்கள் ஆரம்பிக்கக் கூடிய பொருத்தமான வணிக அமைப்பை இனம் கண்டு எழுதுக.

ஆ) வணிகத்தின் விசேட பண்புகள் இரண்டை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

IV.அ) அரசு துறை வணிக அமைப்புகள் இரண்டு தருக.

ஆ) பின்வரும் வணிகங்கள் எவ்வகை வணிக அமைப்புகள் என குறிப்பிடுக.

A. இலங்கை மின்சார சபை

B. **HNB PLC**

(2 புள்ளிகள்)

(8 புள்ளிகள்)

# பகுதி II கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

(05) (I). வணிகம் ஒன்றில் பேரேட்டில் காணக்கூடிய உரிமை கணக்குகள் இரண்டை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

II. உரிமையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

III. வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில தரப்பட்டுள்ளன

அ) கடனுக்கு மீள் விற்பனைக்காக பொருட்கள் ரூபா 35, 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டன.

ஆ) கடன் பட்டோரிடமிருந்து ரூபா 10,000 காசு பெறப்பட்டது.

இ) வங்கி கடன் ரூபா 20,000 மீள செலுத்தப்பட்டது.

ஈ) உரிமையாளர் ரூபா 15,000 பொருட்களை தனது சொந்த தேவைக்காக வணிகத்திலிருந்து எடுத்துள்ளார்.

வேண்டப்படுவது

- மேலே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கான இரட்டை விளைவை எழுதுக.

(4 புள்ளிகள்)

IV. 01.01.2024 இல் இருந்தவாறு நாசர் வணிகத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 100,000 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூ. 40,000 ஆகும் இருந்தது. 01.01.2024 இல் இவ் வணிகத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

அ) காசுக்கு விற்பனை செய்த பொருட்கள் ரூபா 20,000

ஆ) கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு ரூபா 15,000

இ) கடனுக்கு கொள்வனவு செய்து பொருட்கள் ரூபா 30,000

ஈ) ரூபா 25,000 கிரயமான பொருட்கள் ரூ. 30,000 க்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.

உ) ஊழியருக்கு செலுத்திய சம்பளம் ரூபா 20,000

வேண்டப்படுவது

1. 01.01.2024 இல் இருந்தவாறு மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் எவ்வாறு மேற்படி வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை குறிப்பிடுக

( விடையளிப்பதற்கு பின்வரும் மாதிரியை பயன்படுத்துக)

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் = | உரிமைகள் | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| அ) | + 20000(காசு)<br>-20000(சரக்கிருப்பு) | | |
| ஆ) | | | |
| இ) | | | |
| ஈ) | | | |
| உ) | | | |

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

(06) I) மூல ஏடுகள் இரண்டினை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

II) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணம், மூல ஏட்டினை குறிப்பிடுக.

அ) வணிகப் பயன்பாட்டிற்காக ரூபா 200,000 பெறுமதியான கணினி ABC நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது

ஆ) “வசந்த் அன்ட் கோ” நிறுவனத்திடம் இருந்து வணிகத்திற்கு மீள் விற்பனைக்காக ரூ. 30,000 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(2 புள்ளிகள்)

III) பின்வருவன நுஹா வணிகத்தின் 2024 செப்ரெம்பர் மாதத்திற்கான கடன் கொள்வனவுகள் தொடர்பான கொள்வனவு நாளேடு கீழே தரப்பட்டுள்ளது.

கொள்வனவு நாளேடு

| திகதி | பட்டியல் இல | விநியோகஸ்தர் | தொகை | பே.ப |
|---|---|---|---|---|
| 10.09.2024 | 105 | கதிரவன் | 2500 | |
| 20.09.2024 | 106 | மலர்விழி | 3000 | |

வேண்டப்படுவது

அ) கொள்வனவு நாளேட்டினை பூர்த்தி செய்க.

ஆ) உரிய பேரேட்டு கணக்குகள்

(4 புள்ளிகள்)

IV) சுரேஷ் நிறுவனத்தினால் 2024 ஜனவரி மாதத்திற்கான சில்லறை காசு கொடுப்பனவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 01.01.2024 | இல் மீதி | ரூ.200 |
| | மீள் நிரப்பப்பட்ட தொகை | ரூ.2800 |
| 03.01.2024 | முச்சக்கர வண்டி கட்டணம் | ரூ.450 |
| 05.01.2024 | முத்திரை கட்டணம் | ரூ.40 |
| 06.01.2024 | பேனாக்கள் கொள்வனவு | ரூ.100 |
| 08.01.2024 | பிரயாண செலவுகள் | ரூ.250 |
| 12.01.2024 | வசீகரனுக்கு செலுத்தியது | ரூ.500 |
| 15.01.2024 | காகிதாதிகள் கொள்வனவு | ரூ.400 |
| 20.01.2024 | பதிவு தபால் கட்டணம் | ரூ.260 |
| 26.01.2024 | வாடகை வாகன கட்டணம் | ரூ.600 |

வேண்டப்படுவது

அ) இவ் வணிகத்திற்கான ஜனவரி மாத சில்லறை காசேடு

(4புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

(07)I) வங்கி கூற்று என்றால் என்ன ? (2 புள்ளிகள்)

II) வணிகம் ஒன்றின் வங்கி கணக்கு மீதிக்கும் வங்கி கூற்றும் மீதிக்கும் இடையே வேறுபாடு காணப்படுவதற்கான காரணங்கள் இரண்டு குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

III) பின்வருவன வணிகமொன்றில் நிகழ்ந்த கணக்கீட்டு வழுக்களை திருத்துவதில் பேணப்பட்ட இரண்டு பூரணமற்ற நாட்குறிப்பு பதிவுகள் ஆகும்

பொது நாட்குறிப்பேடு

| திகதி | கை.இல | விபரம் | பே.ப | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 2024.03.31 | 201 | ----------------------------------------------<br>---------------------------------------------<br>( ரூ. 50,000 கொள்வனவு பட்டியல் ஏடுகளில் பதியப்படாமை திருத்தியது) | | | |
| | 202 | -----------------------------------------------------------------<br>-------------------------------------------------------------------<br>( ரூ.40,000 அலுவலக உபகரணக் கொள்வனவு கொள்வனவு கணக்கில் வரவு வைக்கப்பட்டது திருத்தியது) | | | |

வேண்டப்படுவது

- வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்

(4 புள்ளிகள்)

**IV) நவீன் வணிகத்தின் 2024 மார்ச் மாதத்திற்கான வங்கி கணக்கு, வங்கி கூற்று என்பன வருமாறு.**

**வங்கிக் கணக்கு**

| திகதி | கை. இல | விபரம் | பே. ப | தொகை | திகதி | கை. இல | விபரம் | பே. ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03.01 | | மீ.கீ.கொ.வ | | 26000 | 03.06 | | கொள்வனவு(201) | | 12000 |
| 03.05 | | காசு வைப்பு | | 10000 | 03.18 | | கடன்கொடுநர் (202) | | 8000 |
| 03.10 | | காசோலை வைப்பு(25) | | 25000 | 03.28 | | கடன்கொடுநர் (203) | | 18000 |
| 03.15 | | காசோலை வைப்பு(48) | | 18000 | 03.28 | | மின்சாரம் (204) | | 10000 |
| 03.29 | | காசோலை வைப்பு(65) | | 9000 | 03.31 | | மீ.கீ.கொ.செ | | 40000 |
| | | | | 88000 | | | | | 88000 |
| 04.01 | | மீ.கீ.கொ.வ | | 40000 | | | | | |

**2024 மார்ச் மாதத்திற்கான வங்கி கூற்று**

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 03.01 | மீ.கீ.கொ.வ | | | 26000 |
| 03.05 | காசு வைப்பு | | 10000 | 36000 |
| 03.08 | காசோலை (201) | 12000 | | 24000 |
| 03.12 | காசோலை வைப்பு (25) | | 25000 | 49000 |
| 03.16 | காசோலை வைப்பு (48) | | 18000 | 67000 |
| 03.20 | காசோலை (202) | 8000 | | 59000 |
| 03.29 | காசோலை (204) | 10000 | | 49000 |
| 03.29 | நேரடி வைப்பு | | 12000 | 61000 |
| 03.31 | வங்கிக் கட்டணம் | 3000 | | 58000 |

**வேண்டப்படுவது**

**அ) நவீன் வணிகத்தின் மார்ச் மாதத்திற்கான வங்கி கணக்கை சீராக்குக.**

**ஆ) மார்ச் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்க கூற்று**

**(4 புள்ளிகள்)**
**(12 புள்ளிகள்)**